# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 534/2016/பே

ஆணை எண்: 22 /2018 நாள் : 13–02–2018

**திரு. சி.வி. பசுபதி,**
**குன்னத்தூர் பேரூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்,**
**குன்னத்தூர்,**
**திருப்பூர் மாவட்டம்.** —— **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**குன்னத்தூர் பேரூராட்சி,**
**திருப்பூர் மாவட்டம்.** —— **எதிர் மனுதாரர்**

## ஆணை

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியின் முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் திரு சி.வி. பசுபதி அவர்களின் 22.11.2014ம் நாளிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.18953/2014/இ.2/நாள் 01.06.2016 ன்படி இம்முறைமன்ற நடுவத்திற்கு 09.06.2016 அன்று பெறப்பட்டது. இம்மனு, முறையீட்டு மனு எண் 534/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவின் மீது உரிய விசாரணைகள் மேற்கொண்டும், அறிக்கைகள் பெறப்பட்டும் கீழ்கண்டவாறு இறுதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் 36 குடிநீர் இணைப்புகள் முறைகேடாக, பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி மற்றும் தனி நபர் திரு எம்.கே.எம். மணி என்பவரும் சேர்ந்து சுமார் ரூ 25,000 முதல் ரூ.30,000 வரை பெற்றுக் கொண்டு இணைப்பு வழங்கியதாக தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி

முறைகேடான இணைப்புகளை கண்டுபிடித்த செயல் அலுவலர் திரு அசோக் குமார் என்பவரை பணியிட மாற்றம் செய்துள்ளதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்று பெறப்பட்ட குடிநீர் இணைப்புகளை தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு துண்டித்துள்ளனர் எனவும் தனது மனுவில் தெரிவித்து விசாரணை கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 13.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழி முறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல் ) விதிகள் 2015ன் விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ10/–க்கான நீதிமன்றக் கட்டண வில்லையுடன் உரிய படிவத்தில் (படிவம் 1) தாக்கல் செய்யுமாறு ஆணையிடப்பட்டது. ஆனால் இதுவரை முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 18.11.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2016ல் நேரில் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது 29.11.2016ம் நாளிட்ட கடிதத்தில் சமீபத்தில் தான் எந்த ஒரு மனுவினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பவில்லை எனவும், 2 1/2 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மனுவினை அனுப்பியதாகவும், அதற்கான ஆவணங்களை மனுவுடன் இணைத்துள்ளதாகவும், இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி ஆஜராக தனது உடல் நிலை சரியில்லாததால் நேரில் வர இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 15.12.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் ந.க.எண். 562/2016/நாள் 03.01.2017ன்படி அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கையின்படி சில கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ 12.01.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரது, 12.04.2016, 013.01.2017, மற்றும் 24.07.2017 நாளிட்ட அறிக்கைகள் யாவும் ஒரே மாதிரியாக இருந்ததாலும் துண்டிக்கப்பட்ட 10 இணைப்புகள் முறைகேடாக பெறப்பட்டவை என்பதாலும் மேற்படி இணைப்புகள் யாரால் அனுமதிக்கப்பட்டது, எந்த தேதியில் அனுமதிக்கப்பட்டது, இந்த இணைப்புகள் யாரால் கண்டுபிடிக்கப்பட்டு துண்டிக்கப்பட்டன, முறைகேடான இணைப்புகள் ஏற்படுத்தியவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்ற விவரங்களை கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் விதி 6 (4) (a) யின் கீழ் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ 10.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு தனது கடித ந.க.எண். 351/2017/ப.3/நாள் 09.01.2018 ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திரு சி.வி. பசுபதி, முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் அளித்த புகார் மனுவின் மீது குன்னத்தூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு ந. அசோக் குமார் என்பவரின் உத்திரவு ந.க.எண். 170/2014 நாள் 26.06.2014ல் அனுமதியற்ற இணைப்புகள் கண்டறியப்பட்டு துண்டிக்கப்பட்டதாகவும், முன்னாள் தலைவர் மற்றும் தனி நபர் திரு எம்.கே.எம். மணி ஆகியோர் முறைகேடாக இணைப்புகள் வழங்கியமைக்கு உண்டான ஆதாரம் ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குடிநீர் இணைப்புகள் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதாக புகார் மனு வரப்பெற்றதன் அடிப்படையில் மேற்படி குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு செய்ய முன்னாள் குன்னத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண் 170/2014/நாள் 26.06.2014ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பொருள் குறித்து கோப்பினை பரிசீலித்ததில் யாரால் குடிநீர் இணைப்புகள் முறைகேடாக வழங்கப்பட்டது என்பதற்கான விவரம் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

துண்டிக்கப்பட்ட இணைப்புகள் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ந.அசோக்குமார் என்பவரால் கண்டறிப்பட்டு, இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்ட செயல் அலுவலர்கள் மற்றும் பணியார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் இல்லாததால் செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு தெரிவத்துள்ளார்.

முறைகேடாக வழங்கப்பட்ட 10 இணைப்புகளும் 04.07.2014 அன்று துண்டிக்கப்பட்டு தற்போது வரை துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாக 15.11.2017 அன்று நடத்தப்பட்ட விசாரணையில் திரு எ. சுரேஷ் மின் மோட்டார் இயக்குபவர் மூலம் அறியப்பட்டதாக செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயககுநர், ஈரோடு அவர்களின் ஆய்வறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இதில் 04.07.2014 அன்று துண்டிக்கப்பட்ட 10 முறைகேடான இணைப்புகள் நாளது தேதி வரை துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் பேரூராட்சி தலைவர் மற்றும் தனி நபர் திரு எம்.கே.எம்.மணி ஆகியோரால் முறைகேடான இணைப்புகள் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் ஏதுமில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி இணைப்புகள் யாரால் அனுமதிக்கப்பட்டது, என்பதற்கான கோப்புகள் ஏதும் பேரூராட்சியில் இல்லை எனவம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறையீட்டு மனுதாரரை தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கக் கோரி ஆணையிப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரர் தனது

விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்திற்கு ஆஜராக ஆணையிட்டிருந்தும் அவர் அவ்வாறு ஆஜராகி தனது தரப்பு விளக்கங்களையும் ஆதாரங்களையும் தாகல் செய்யத் தவறியுள்ளார்.

எனவே மேற்படி முறையீட்டு மனு குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களின் ஆய்வறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுவினை ஆதாரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்13 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்.

பெறுநர்

1.திரு. சி.வி. பசுபதி,
குன்னத்துார் பேரூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்,
குன்னத்துார்,
திருப்பூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்
குன்னத்துார் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
ஈரோடு

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108